# காப்புமுனை

முனைக்காடு மண்ணில் இருந்து.....



## நாகசக்தி இந்து இளைஞர் மன்றத்தின் வரலாறு

வெளியீடு
நாகசக்தி இந்து இளைஞர் மன்றம்,
முனைக்காடு.

# காப்புமுனை

முனைக்காடு மண்ணில் இருந்து......

- காப்பு 1 -

## நாகசக்தி இந்து இளைஞர் மன்றத்தின் வரலாறு


இதழாசிரியர்

வ.துசாந்தன்

வெளியீடு :

நாகசக்தி இந்து இளைஞர் மன்றம்,

முனைக்காடு.





## உள்ளே..

விடயம் | பக்கம்


1. ஆசிச் செய்தி 3
2. ஆசிரியரின் உள்ளத்திலிருந்து 5
3. நாகசக்தி இந்து இளைஞர் மன்றம் 6
4. நான்கண்ட நாகசக்தி 27
5. முனைக்காடு மண்ணுக்கு பெருமை சேர்த்த நாகசக்தி 30
6. நாகசக்தியின் நாடகப்பயணம் 33


**மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் உள்ள முனைக்காடு கிராமத்தின் அடையாளமாய் 'காப்புமுனை' வெளியாகின்றது.**




## வெளியீட்டு குழு

திரு.இ.குகநாதன்
திரு.ந.சுவாஸ்கரன்
திரு.வ.துசாந்தன்
திரு.ச.மகேஸ்வரன்
திரு.ம.கேதீஸ்வரன்
திரு.ச.தோசீலன்
திரு.சி.ஜீவிதன்
திரு.ம.குகநாதன்

அட்டை வடிவமைப்பு
திரு.வ.திவாகரன்

# ஆசிச் செய்தி

ஆதி சிவனாரது ஆபரணமதாகி
அண்ட சராசரத்தையும் சிரசிலே தாங்கி
கருநீல வண்ணனுக்கு படுக்கையதாகி
கர்ணன் கையினிலே நாகபாசூமதாய் இலங்கி
பாற்கடல் கடைய மத்தின் கயிறதாக இருந்து
பார்காக்கவே அட்டமா நாகமதாகி
கருதரிய கணபதியின் அரையிலே ஞாணதாகி
கற்பனைக் கெட்டாத கலைஞனாக ஆடி
இத்தகை பெருமை கொண்ட நாகத்தின் பெயரோடு
இலங்குமெங்கள் நாகசக்தி கலைமன்றம் வளர்க!

எழில் பெற்றிலங்குகின்ற ஈழவள நாட்டினிலே இயல்பாகவே கலைவளம் மிக்க காரேறு வேளாளர் வாழ்கின்ற கனத்த பூமியிடை சகல வளங்களையும் தன்னகத்தே அடக்கி நிற்கும் முனைக்காட்டிலே கலை வளர்க்க, கலைபரப்ப, மங்கிப்போகின்ற தமிழர் பாரம்பரியங்களை தூக்கி நிறுத்த ஆடல், பாடல், தாளலயம் நாட்டார்பாடல், இலக்கியம், கூத்து, நாடகம், நடனம், பேச்சு, புலமை, கலையரங்கம், களரி, காட்சிப்படுத்தல், நூல்வெளியீடு என எல்லாத்துறைகளையும் தன்னகத்தே கொண்டிருப்பது நாகசக்தி கலைமன்றம். இம்மன்றத்தின் அனைத்து கலைஞர்களும் இயக்குனர்களும் மனம் கோணாது உடல் வலிமையுடன் உணர்வாற்றல் மிக்கவராய் கலைப்பணியில், கலைப்பயணத்தில் சிறப்படைய வேண்டும் என்றும் இவர்களின் கலைப்புகழ் உலகெலாம் மிளிரவேண்டும் என்றும் செல்லரித்து சிதைந்து போயுள்ள எமது நாகரீகம் பாரம்பரியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், தமிழுடன் சைவமும் தழைத்தோங்க வேண்டும் என்றும் இவ்விடயங்களை முயற்சியுடையோராய் முன்னோக்கி செலுத்துதற்கும் ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் திருவருளோடு குருவருளும் கிட்டிநலம்பெற உளப்பூர்வமான ஆசியினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

முனைக்காடு ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலயமும் அதனோடிணைந்த நாகசக்தி கலைமன்றமும் மிகவும் பயன்படும் விடயங்களையும் தமிழ் பாரம்பரியங்களையும் பாதுகாப்பதை முழுக்கடமையாகக் கொண்டு இயங்கி வருகின்றது. அதனுடைய செயல்பாட்டின் ஆரம்பமாக ஆலயத்தில் வெள்ளிக்கிழமை மாலை நேரத்தில் கூட்டுப்பிரார்த்தனை பாடுவது இதை சிறுவர் முதல் பெரியவர் வரை ஆண், பெண், வயது வித்தியாசமின்றி பாடி பரவசம் அடைதல் என ஆரம்பித்து தொடர்ச்சியாக

சமயம் சம்பந்தமான வினா, விடைப்போட்டி, திருமுறை ஓதுதல், பண்ணுடன் பாடுதல் எனவும் நாடகம், கும்மி, வசந்தன், கரகம், கோலாட்டம் என சில மணிநேர நிகழ்வுகளையும் நடாத்தி பின்பு தமிழர்களின் பாரம்பரியமான எமது முன்னோர்கள் எமக்கீந்த நாட்டுக்கூத்து இரவு முழுக்க ஆடுவது என தம்மை உயர்த்திக் கொண்டே சென்றார்கள்.

பொதுவாக இவ்விடயங்களை செய்வதற்கு எவ்விதமான சட்டதிட்டங்கள் இன்றி கலைஞர்களை மட்டுமின்றி ரசிகர்களையும் கலைஞராக மாற்றிய திறந்த பல்கலைக்கழகமாக செயல்பட தொடங்கினார்கள். பார்வையாளர்கள், முதியவர்கள், அனுபவசாலிகள் கௌரவிக்கப்பட்டார்கள், கிராமமே அதில் அங்கம் வகிக்கும் அளவிற்கு செயல்பாடு வெளிப்படுத்தப்பட்டது. ஆலயத்திலும் உயர்வு தாழ்வு இன்றி அடியார்களாக எல்லோரும் உள்ளீர்க்கப்பட்டார்கள் இதனால் வளர்ச்சிப் பாதையில் முன்னேறுவதற்கு ஒற்றுமையே பலம் என நிருபிக்கப்பட்டது. இவையனைத்திற்கும் முதியவர்கள், கலைஞர்கள், அனுபவசாலிகளின் ஆலோசனைப் பெறப்பட்டது.

இவ்வளர்ச்சி முனைக்காடு கிராமத்தை பிரதேசம், மாவட்டம், மாகாணம், தேசம் என உலகளாவிய ரீதியில் உயர்ந்தோங்கி நிற்கின்றது. பிரதேச செயலகம், மாவட்ட செயலகம், பல்கலைக்கழகம், கல்வியலாளர்கள், கனவான்கள், ஆராய்ச்சியாளர்கள் என எல்லோரும் பாமரன் வரை கிராமிய பாரம்பரியம் நடைமுறைகள், பண்பாடு, நாகரீகம், எல்லாவற்றையும் அறிந்து கொள்ள நாகசக்தி கலைமன்றம் வழிகாட்டியாய் ஊன்று கோலாய் நிற்கின்றது. இவர்களது தமிழ்ப்பணி, சமயப்பணி, கலைப்பணி, பொதுப்பணி உலகுள்ளவரை நிலைத்து நின்று தொடரும் பணிகள் தொடர்ந்து கொண்டு செல்ல எல்லாம்வல்ல ஸ்ரீ நாகலிங்கேஸ்வரப் பெருமானை வணங்கி ஆசி தெரிவித்து இறைஞ்சுகின்றேன்.

சிவஸ்ரீ.ப.மானாகப்போடி ஐயர்
ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலய பிரதமகுரு,
முனைக்காடு.

# காப்புமுனை

முனைக்காடு மண்ணில் இருந்து......

கப்பு 01, முனை 01, வியாழக்கிழமை, 11.07.2019

முனைக்காடு, கொக்கட்டிச்சோலை

*முனைக்காடு கிராமத்தின் பழமை பெயர்களில் ஒன்றான "காப்புமுனை" என்ற நாமத்துடன் நாகலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்தின் 6ம் இரவுக் கலை விழாவை சிறப்பித்து இச்சஞ்சிகை வெளியாகின்றது.*

*காலனியம், நவீனம் போன்றவை உள்ளூர் அறிவை ஓரங்கட்டி மனித வாழ்வியலில் பாரிய தாக்கத்தினை செலுத்தி பலவற்றை இல்லாது செய்துகொண்டிருக்கின்றன. இதில் உள்ளூர் கதைகள் வழக்காறுகள், தொழில், சடங்கு, கலை, வாழ்வியல் என பலவை அடங்கும் ஒரு சமூகம் அல்லது ஒரு நிறுவனம் நீடித்து நிலைத்து நிற்பதற்கு அதன் செயற்பாடுகள் தொடர்ச்சியாக கையளித்தல் அவசியமாகின்றது. இங்நிலையில் ஆவணப்படுத்தல் என்பது முக்கிமானது.*

*இப்பிரதேசத்தில் முதன்முதலாக "ஒளி" என்ற சஞ்சிகையை வெளியிட்ட பெருமை முனைக்காடு கிராமத்திற்கே உள்ள போதிலும், இரு தசாப்தங்களுக்கும் மேலாக ஒளி சஞ்சிகை வெளிவரவில்லை. சஞ்சிகையொன்று வெளிவர வேண்டுமென்ற ஆதங்கமும், அவாவும் பலர் மத்தியில் இருந்தன. இவ்வாதங்கத்தினையும், அவாவையும் நாகசக்தி இந்து இளைஞர் மன்றத்தின், எழுதளிர் நிஜமாக்கியது. 2011ம் ஆண்டு காலப்பகுதியில் மாணவர்களின் ஆக்கங்களை உள்ளடக்கிய "தளிர்" சஞ்சிகை முதலாவது பிரசவமானது. பின்னர் பிரதேச எழுத்தாளர்களை உள்ளடக்கிய வகையில் இரண்டாவது தளிர் சஞ்சிகையும், மூன்றாவது மாணவர்களது ஆக்கங்களை உள்ளடக்கிய தளிர் சஞ்சிகையும் வெளியாகிருந்தது.*

*உலகநாச்சி வரலாற்றோடு தொடர்புடையதாக கூறப்படுகின்ற பழமையான முனைக்காடு கிராமம் பல்வேறு துறைகளிலும் தனக்கென தனித்துவ இடத்தினை நிலைநாட்டியுள்ளது. இங்நிலையில்தான் இக்கிராமத்தினது வரலாறுகள், சேவைகள், பணிகள் இளம் தலைமுறையினருக்கு கடத்தப்பட வேண்டும் என்ற நோக்கில், முதல்பிரசவமாக நாகசக்தி இந்து இளைஞர் மன்றத்தின் வரலாற்றினை பதிவாக்கும் வண்ணம் வெளியாகின்றது. தொடர்ந்தும், கிராமத்தின் பல்வேறு வரலாறுகளுடன் "காப்புமுனை" வெளியாகும் என்ற நம்பிக்கையுடன்....*

*திரு.வ.துசாந்தன்,*
*ஆசிரியர்,*
*காப்புமுனை.*

# நாகசக்தி இந்து இளைஞர் மன்றம்

## கிராமம் பற்றிய அறிமுகம்

மீனினங்கள் கவிபாடி கலையின் வாடையினை வீசவிடும் மட்டக்களப்பு மாவட்டத்தின், மரநிழல்களில் மத்தள ஓசைகளும், பாடல் சத்தங்களும், பறவைகளின் ஓசைகளும் ஒலிக்கும் படுவான்கரை பிரதேசத்தில், தேசமெங்கும் புகழ்பரப்பி நிற்கும் கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாம் பண்டாரியாவெளி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தினையும், தா என்றால் இந்தா என்று வழங்கும் தாந்தாமலை முருகனையும், சுயம்புலிங்கமாய் வீற்றிருந்து, வெள்ளையரையும் துரத்தியடித்த கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தினையும், வாவிகளையும், வயல்வெளிகளையும், வனங்களையும், மலைகளையும் கொண்ட பிரதேசமே மண்முனை தென்மேற்கு பிரதேசமாகும். 24கிராமசேவையாளர் பிரிவினைக்கொண்ட இப்பிரதேசத்தில், 4கிராமசேவையாளர் பிரிவினையும், அதிக சனத்தொகையையும் கொண்ட அழகிய கிராமமாக முனைக்காடு கிராமம் அமைந்துள்ளது.

பழங்காலம் காப்புமுனை, களப்புமுனை, மணற்காடு என்றாலும் இன்று முனைக்காடு என்ற நாமத்துடனேயே உள்ளது. முனைக்காடு என்ற நாமத்துடன் ஊர் இருக்க, முனைக்காடு கிராமத்தின் தாய்வயிற்றில் பிறந்த பிள்ளைகள் பல ஊர்களில் பரந்து விரிந்து இருக்கின்றனர். 2018ம் ஆண்டின் கணக்கெடுப்பின் அடிப்படையில் 4629பேர் இக்கிராமத்தில் வசிக்கின்றனர். இப்பிரதேசத்தில் கல்வியிலும், விளையாட்டிலும், கலையிலும், அரசியலிலும் முதன்முதலில் உயர்ச்சிப் பெற்றவர்கள் முனைக்காடு கிராமத்தினரே என்றால் யாருமே மறுப்பதற்கில்லை. பேராசிரியர், வைத்தியர், பொறியியலாளர், சட்டத்தரணி, பிரதேச செயலாளர், கல்விப்பணிப்பாளர், அதிபர் என்று பல்வேறுமட்ட அரச உத்தியோகத்தர்களை முதன்முதல் உருவாக்கிய பெருமையும்

முனைக்காடு கிராமத்திற்கே உள்ளதுடன் நாட்டினது நாடாளுமன்றத்திற்கு உறுப்பினர் ஒருவரை அனுப்பிய வரலாறும் இக்கிராமத்திற்கே உள்ளது. விளையாட்டின் ஊடாக வெற்றிகளைப்பெற்று, இராமகிருஸ்ணா என்றால் அதற்கென தனியான இடத்தினை பிடித்துவைத்திருந்தமையும், ஒளிக்கல்லூரி என்ற பெயருடன் படுவான்கரை பிரதேசம் எங்கும் 1978 சூறாவளியின் பின் கல்வியை வழங்கியமையினையும், பிரதேசத்தில் "ஒளி" சஞ்சிகையை வெளியிட்டமையினையும் என்றும் மறைத்துவிட முடியாது. பிரதேசம், மாவட்டம் என்ற ரீதியாக இயங்கிய பல்வேறு அமைப்புக்களிலும் வழிநடாத்தும் பொறுப்புக்களை ஏற்று நடாத்தியதுடன், இன்றுவரை நடத்துகின்றவர்களாகவும் இக்கிராமத்தவர்கள் உள்ளனர். கிராமத்தில் கலைக்கதிர் கலா மன்றத்தினை அமைத்து அதன் ஊடாக நாடகம், கூத்து, வில்லுப்பாட்டு என பல்வேறு கலைகளை வளர்த்திருக்கின்றனர். "கண்டி" வரை கலைகள் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றமையும் கடந்தகால வரலாறாக இருக்கின்றது. காலச்சூழல்களை கருத்தில் கொண்டு நகைச்சுவை நாடகங்களையும், சமூக விழிப்புணர்வு நாடகங்களையும் ஆற்றுகை செய்திருக்கின்றனர். 1978ம் ஆண்டு வீசிய சூறாவளியினால் பொருளாதாரங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. அக்காலத்தில் கூட சூறாவளியினை நினைவுபடுத்தும் வகையில் சூறாவளி கூத்தினையும் அரங்கேற்றியிருக்கின்றனர்.

தற்கால பொருளாதார சுமை, நவீன உலகம், போட்டிமிகு தனிநபர் போன்ற பல்வேறு காரணங்களினால் கிராமத்தின் அப்போதைய துடிப்பு நிலை அமைப்புக்கள் செயலிழந்து காணப்படுகின்றன. ஆனாலும் கிராமத்தில் இன்றும் பல செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதுடன், பிரதேசம், மாவட்டம், மாகாணம், தேசியம் தழுவிய வகையிலும் முனைக்காடு கிராமத்தின் பெயர் பறைசாற்றப்பட்டுக்கொண்டுதான் உள்ளது. இக்கிராமத்தில் நான்கு ஆலயங்கள் அமையப்பெற்று கிராமத்திற்கு மனதிருப்தியையும், மகிழ்ச்சியையும் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. அதேபோல வித்தியாலயங்கள் இரண்டு அமையபெற்று நல்லறிவினை

வழங்கிக்கொண்டிருக்கின்றன. ஆலயங்களோடு இணைந்த வகையில் மன்றங்களும் அமையப்பெற்று தத்தம் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன. அவ்வாறான மன்றங்களில் நாகசக்தி இந்து இளைஞர் மன்றமும் ஒன்றென்ற வகையில் அம்மன்றத்தின் வரலாற்றினை ஆராய்ந்து பார்க்க முடியும்.

## *மன்றத்தின் தோற்றம்*

முனைக்காடு கிராமத்தில் முனைக்காடு வடக்கு கிராமசேவையாளர் பிரிவில் ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலயம் அமையப்பெற்றுள்ளது. இவ்வாலயம் ஸ்ரீ நாகதம்பிரான் என்ற பெயருடனே ஆரம்ப காலம் தொடக்கம் 2009ம் ஆண்டுவரை இருந்தது. 2009ம் ஆண்டு இவ்வாலயம் கும்பாபிஷேகத்தினை கண்டதன் பின்னர் ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் என்ற நாமத்தினை பெறுகின்றது. இவ்வாலயத்தினை மையமாகக் கொண்டு ஆலய உற்சவத்தின் போது கலைநிகழ்வினை ஆற்றுகை செய்வதற்காக 1990க்கு முன்னர் மின்னொளி கலை மன்றம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. நாடகங்கள், ஏனைய கலைகளை ஆற்றுகை செய்வதற்காக இவ்வமைப்பு உருவாக்கப்பட்டதே தவிர, நிருவாக கட்டமைப்புடன் இயங்கவில்லை. 1990க்கு பின்னர், எமது கிராமத்தின் இளைஞர்கள், பண்டைய கலைகளை கட்டி வளர்க்க எண்ணி, ஆலய பொதுக்கூட்டத்தில் இதுதொடர்பில் கருத்துக்களை கூறி, “நாகேஸ்வரா” என்ற பெயரில் 1991ம் ஆண்டில் கலை மன்றத்தினை உருவாக்கியிருக்கின்றனர். உருவாக்கப்பட்ட அதே ஆண்டு “பக்கத்து வீடு பத்துலெட்சம்” எனும் சமூக சீர்திருத்த நாடகத்தை மேடையேற்றி வளர்ச்சி காண ஆரம்பித்துள்ளது.

## *வளர்ச்சி*

1991ம் ஆண்டில் இருந்து, தனியாகவும் இந்து இளைஞர் மன்றம், கலைக்கதிர்கலா மன்றம் போன்ற மன்றங்களின் உதவியுடனும் வருடாந்தம் கலை நிகழ்வுகளை ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய உற்சவத்தின் போது ஆற்றுகை செய்து வந்திருக்கின்றது. பின்வந்த காலப்பகுதியில் **“நாகேஸ்வரா கலை மன்றம்** என்ற பெயர் மாற்றப்பட்டு 2000ம் ஆண்டு **நாகசக்தி இந்து இளைஞர் மன்றம்** என்ற நாமத்தை பெற்றது. யாப்பு விதிகளுடன் கூடிய நிருவாக அங்கத்தவர்களை உள்ளடக்கி மன்றம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து மன்றத்தினை பதிவுசெய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான முயற்சிகளில் இடையூறுகளும் ஏற்பட்டிருந்தன. இதனால் சில வருட காலங்கள் பதிவு செய்யப்படாத ஒரு மன்றமாகவே இயங்கி வந்திருக்கின்றது. பின்னர் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் 2008ம் ஆண்டு பதிவுசெய்யப்பட்டு, HA/04/BT/287 என்ற பதிவு இலக்கத்தினையும்

பெற்றிருக்கின்றது. 2010ம் ஆண்டு இம்மன்றத்திற்கென சின்னமொன்றும் உருவாக்கப்பட்டு அதே ஆண்டு “செய் செயற்படுத்து” என்ற மகுடவாசகத்தினை கொண்டு மேலும் செயற்பட ஆரம்பித்திருக்கின்றது. இம்மன்றத்தின் செயற்பாடுகள் ஆன்மீகம், கல்வி, கலை, பொதுப்பணி போன்ற பல்வேறு பிரிவுகளுடாக பார்க்க முடியும்.

2000 ஆண்டில் இருந்து நிருவாக கட்டமைப்புடன் இயங்கி வந்த நிலையில் 2006ம், 2007ம் ஆண்டுகளில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக அனைத்து மக்களும் இங்கிருந்து இடம்பெயரவேண்டிய துர்ப்பாக்கிய நிலையினை அடைந்தனர். இதன்காரணமாக மன்றத்தின் ஆவணங்கள் பல இல்லாமல் போயிருக்கின்றன. 2007ம் ஆண்டு மீண்டும் குடியமர்த்தப்பட்டதன் பின்னர் அமைக்கப்பட்ட நிருவாக கட்டமைப்பு தொடர்பில் அவதானிக்கின்ற போது,

| *நிருவாகம் அமைக்கப்பட்ட திகதி* | *பதவி* | *பெயர்* |
|---|---|---|
| 10.08.2007 | தலைவர் | இ.குகநாதன் |
| | செயலாளர் | ச.மகேந்திரவர்மன் |
| | பொருளாளர் | குணரெத்தினம் |
| 05.03.2008 | தலைவர் | க.கமல்ராஜ் |
| | செயலாளர் | ச.லிங்கேஸ்வரன் |
| | பொருளாளர் | ம.கேதீஸ்வரன் |
| 16.06.2008 | தலைவர் | சி.சிவகாந்தன் |
| 31.07.2009 | தலைவர் | க.ரகுநாதன் |
| | செயலாளர் | ச.லிங்கேஸ்வரன் |
| | பொருளாளர் | ம.தில்லைநாதன் |
| 17.09.2010 | தலைவர் | மு.நமசிவாயம் |
| | செயலாளர் | வ.துசாந்தன் |
| | பொருளாளர் | ம.தில்லைநாதன் |
| 21.01.2011 | பொருளாளர் | ம.கேதீஸ்வரன் |
| 03.07.2012 | தலைவர் | ச.லிங்கேஸ்வரன் |
| | செயலாளர் | சி.வினோ |
| | பொருளாளர் | கி.பாஸ்கரன் |
| 20.06.2013 | பொருளாளர் | நா.பாஸ்க்கரன் |
| 07.06.2014 | தலைவர் | ச.சபேஸ்கரன் |
| | செயலாளர் | ச.மகேஸ்வரன் |
| | பொருளாளர் | ச.செல்வேந்திரன் |
| 25.08.2016 | தலைவர் | ந.சுபாஸ்கரன் |
| | செயலாளர் | ச.மகேஸ்வரன் |
| | பொருளாளர் | ச.தோசீலன் |

## ஆன்மீகம்.

ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலயத்தினை மையமாகக் கொண்டு, ஆரம்பிக்கப்பட்ட மன்றமென்ற ரீதியில், நாகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெறும் கூட்டுவழிபாடு பூசையினையும், நவராத்திரி விரதப்பூசையினையும் பொறுப்பேற்று, பூசைக்கான உபயகாரர்களை தெரிவு செய்து இப்பூசைகளை ஆலயத்தில் நடாத்தி வருகின்றது. வெள்ளிக்கிழமைகளில், விசேட தினங்களில் கூட்டுவழிபாட்டின் போது பஜனைப் பாடல்களைப் பாடுதல், வினாவிடைப் போட்டிகளை நடாத்துதல், சரியைத் தொண்டுகளில் ஈடுபடுதல், ஆலய நிருவாகத்தினால் பொறுப்பளிக்கப்படுகின்ற வேலைகளை செய்தல், உற்சவகாலங்களிலும், ஏனைய விசேட காலங்களிலும் ஆலயத்தில் சோடணைகளை மேற்கொள்ளல், கிராமத்தில், பிரதேசத்தில் உள்ள ஆலயங்களுக்கு சென்று பஜனைப்பாடல்களை பாடுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலயம் 2009ம் ஆண்டு கும்பாபிஷேகம் காண்பதற்கு நாகசக்தி இந்து இளைஞர்மன்றத்தின் செயற்பாடு மிகவும் துடிப்பாக இருந்திருக்கின்றது. குறிப்பாக 2009ம் ஆண்டிற்கு முன்னர் நாகசக்தி இந்து இளைஞர் மன்றத்தின் செயற்பாடுகள் கும்பாபிஷேகத்துடன் இணைந்ததாகவே அமைந்திருந்தன. ஆலயத்தில் கட்டுமானப்பணிகளை மேற்கொள்வதற்காக நிதிசேகரிப்பு பணியிலும், சரீர உதவிகளை வழங்குவதிலும் அதிக கவனத்தினைச் செலுத்தியிருக்கின்றனர். ஒவ்வொரு கிராமங்கள் தோறும் சென்று நிதிசேகரிப்பிலும், நெல்சேகரிப்பு, பிடிஅரிசி சேகரிப்பு பணியிலும் ஈடுப்பட்டுள்ளனர். நாகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் புற்று அமைந்துள்ள பகுதிக்கான கட்டுமான பணிகளை முற்றாக நாகசக்தி இந்து இளைஞர் மன்றமே பொறுப்பேற்று செய்திருக்கின்றது. கடல்கடந்து தொழில்புரிகின்ற உறவுகளின் உதவியுடன் சூரன் உருவத்தினையும்,

பெறுமதியான ஒலி, ஒளிசாதனங்களையும் கொள்வனவு செய்திருக்கின்றமையும் மன்றத்தின் உச்ச வளர்ச்சியினை காட்டுகின்றது. அதேபோன்று இதற்கான நிதியினை கலைகளின் ஊடாகவே சம்பாதித்திருக்கின்றனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழும், மன்றத்தின் அனுசரணையுடனும் ஆலயத்தின் முன்றலில் கலையரங்கினை அமைத்திருக்கின்றனர். இவ்வாறான பல்வேறு கட்டுமான பணிகளை மேற்கொள்ளல், கலை வளர்ச்சிக்கு தேவையான சொத்துக்களை கொள்வனவு செய்தல் போன்ற செயற்பாடுகளிலும் நாகசக்தி இந்து இளைஞர் மன்றம் ஈடுபட்டிருக்கின்றது.

**கல்வி.**

ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்தின் போது நடைபெறுகின்ற கலைநிகழ்வில், கிராமத்தில் இருந்து கற்று கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தில், புலமைப்பரிசில் பரீட்சையில், பல்கலைக்கழகத்திற்கு, தேசியகல்வியற் கல்லூரிக்கு தெரிவு செய்யப்படுகின்ற மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்த நாகசக்தி இந்து இளைஞர் மன்றம், பாடசாலை செல்லாது வீடுகளில் நிற்கின்ற மாணவர்கள், பாடசாலையை விட்டு இடைவிலகி நிற்கின்ற மாணவர்களை பாடசாலையுடன் இணைக்கும் செயற்பாட்டில் 2007ம் ஆண்டிற்கு பின்னர் ஈடுபட்டனர். அவ்வாறு பாடசாலையுடன் இணைப்புச் செய்யும் மாணவர்களில் பலர் எழுத, வாசிப்பதில் இடர்படுகின்றனர் என்ற உண்மையினை உணர்ந்துகொண்டதுடன் இதற்கு வீட்டில் கற்காமையும் காரணமென்பதனை அறிந்ததன் மூலமாக, நாகலிங்கேஸ்வரர் ஆலய முன்றலில், அவ்வாறானவர்களை அழைத்து மாலை 6 மணி தொடக்கம் 8மணி வரை கற்பிக்க ஆரம்பித்துள்ளனர். இச்செயற்பாட்டின் மூலமாக நாகசக்தி கல்வி கூடம் என்ற நாமத்துடன் 2009.08.01ல் நாகசக்தி இந்து இளைஞர் மன்றத்தின் கல்விச்

செயற்பாடு ஆரம்பிக்கப்படுகின்றது. எழுத, வாசிக்க இடர்படுகின்றவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இரவு நேர கற்றல் கற்பித்தல் வகுப்பு பின்னர், தரம் 3 தொடக்கம் 8வரையான மாணவர்கள் கல்வி கற்கின்ற இடமாக மாறியிருக்கின்றது. 2009ம் ஆண்டு 30 மாணவர்களுடன் ஆரம்பித்த இரவுநேர கற்றல் வகுப்பில் 2012ம் ஆண்டு 281 மாணவர்கள் கல்வி கற்றிருக்கின்றனர். "நாகசக்தி கல்விக்கூடம்" என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்பாடு "இளந்தளிர்" என்ற பெயராக மாறி தொடர்ந்து "எழுதளிர்" என்ற பெயர்மாற்றத்தினைப் பெற்றிருக்கின்றது. கிராமத்தில் இருந்த பட்டதாரிகள், உயர்தரம் கற்றவர்கள், சாதாரணதரம் கற்ற இளைஞர்களை கொண்டு இவ் இரவுநேர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. நாகசக்தி இந்து இளைஞர் மன்றத்தினை தலைமை அமைப்பாக கொண்டு உப அமைப்பாகவே எழுதளிர் நிருவாக அமைப்பும் இயங்கியது. இவ்வமைப்பினை பதிவு செய்வதற்கான முன்னெடுப்புக்களை செய்தபோதும் இவ்வமைப்பு பதிவுசெய்யப்படாத அமைப்பாகவே நாகசக்தி இந்து இளைஞர் மன்றத்தின் கீழ் இயங்கி வருகின்றது.

"ஒன்றாய் எழுவோம்" என்ற மகுடவாசகத்துடன் இயங்கும் எழுதளிர் அமைப்பானது தனக்கென சின்னமொன்றையும், கல்விக்கூடத்திற்கான கீதத்தினையும் கொண்டிருக்கின்றது. மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை அதிகரிக்கச் செய்வதற்காக மாதாந்த பரீட்சைகளையும், பெற்றோர் சந்திப்புக்களையும் ஏற்படுத்தியிருந்தனர். போட்டி நிகழ்வுகளை நடாத்துதல், மாணவர் மன்றத்தினை நடாத்துதல் போன்ற இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் முன்னெடுத்திருக்கின்றது. கல்விச்சுற்றுலா, தரம் 5 மாணவர்களுக்காக பிரதேச மட்டத்திலான கல்விக் கருத்தரங்குகளை நடாத்துதல் போன்ற சேவைகளையும் மேற்கொண்டிருக்கின்றது. மாணவர்கள், பிரதேச எழுத்தாளர்களை உள்ளடக்கிய வகையில் "தளிர்" என்ற பெயரில் மூன்று

சஞ்சிகையினையும் இதுவரை வெளியிட்டிருக்கின்றனர். கலைநிகழ்வு, பரிசளிப்பு விழா போன்றவற்றையும் நடாத்தியிருக்கின்றனர். கிராமத்தில் 2012ம் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பால்மா பக்கட்களையும் வழங்கியிருக்கின்றனர்.

2009ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து 2012ம் ஆண்டுவரை பல்வேறு செயற்பாடுகளுடன் வளர்ச்சிப்போக்கினை கொண்டிருந்த எழுதளிர், பின்னர் வளர்ச்சியில் இருந்து சற்று சரிவினை எதிர்கொண்டது. இளைஞர்களுக்கான வேலைச்சுமை, புதிய இளைஞர்கள் இணைந்து செயற்படுவதில் ஆர்வம் செலுத்தாமை போன்ற பல்வேறு காரணங்களினால் எழுதளிரின் செயற்பாடு மிகவாக குறைய ஆரம்பித்தது. இதனால் இடையிடையே கல்விச் செயற்பாடு முன்னெடுக்கப்படுவதும், பின்னர் சிறிதுகாலம் தடைப்படுவதும் கவலைக்குரியதே. தற்போதும் கல்விச் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு முயற்சித்தாலும் ஆளணிப்பற்றாக்குறையின் காரணமாக தடைப்பட்டே செல்கின்றது.

## கலை

நாகசக்தி இந்து இளைஞர் மன்றம் ஆரம்பத்தில் நாடகம் நடாத்துவதனையும், கூட்டுப்பிராத்தனையை பாடுவதனையும் நோக்காக கொண்டே ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய ஆலய உற்சவத்தின் போது வருடாந்தம் கலைநிகழ்வுகளை அரங்கேற்றி வந்திருக்கின்றது. பாரம்பரிய பண்பாடுகளை பேணிப்பாதுகாப்பதிலும் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. கலைச் செயற்பாட்டினை முன்னெடுப்பதற்காக நாகசக்தி கலை மன்றம் என்ற பதிவு செய்யப்பட்ட அமைப்பினையும் இம்மன்றம் பெற்றிருக்கின்றது. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் 2008ம் ஆண்டு “நாகசக்தி கலை மன்றம்” பதிவுசெய்யப்பட்டது. இம்மன்றத்தின் கீழ் கலைச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் நிருவாக நடைமுறைகள் அனைத்தையும் நாகசக்தி இந்து இளைஞர் மன்ற நிருவாகத்தினரே மேற்கொண்டு வந்தனர். இருந்தபோதிலும் 2013ம் ஆண்டு நாகசக்தி கலை

மன்றத்திற்கென புதிய நிருவாகம் தெரிவு செய்யப்பட்டது. இதன் தலைவராக இ.குகநாதன், செயலாளராக ம.கேதீஸ்வரன், பொருளாளராக வ.வினோதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இருந்தபோதிலும் இந்நிருவாகத்தின் நிருவாக காலம் நிறைவுபெற்றதன் பின், 2016ம் ஆண்டு மீண்டும் நாகசக்தி இந்து இளைஞர் மன்ற நிருவாகத்தினரே, கலைமன்றத்தின் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென எடுக்கப்பட்ட பொதுக்கூட்டத் தீர்மானத்திற்கமைய நாகசக்தி இந்து இளைஞர் மன்றத்தின் நிருவாகத்தினரே இற்றைவரை இம்மன்றத்தின் நிருவாக அங்கத்தவர்களாகவிருந்து செயற்படுத்தி வருகின்றனர்.

பண்பாடுகளை பேணிப்பாதுகாக்கும் நோக்கில் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. வருடாந்தம் பட்டிப்பொங்கல் நிகழ்வுகளை மேற்கொள்ளல், பட்டிக்காரர்களை கௌரவித்தல், சித்திரைப்புத்தாண்டில் ஊஞ்சல் போடுதல், பட்டிமன்றம், கவிதையரங்குகளை நடாத்துதல், கிராமிய விளையாட்டுக்களில் ஈடுபடுதல், மாவட்டம் தழுவிய ரீதியில் கலைஞர்களை கௌரவித்தல், பட்டங்களையும், விருதுகளையும் வழங்குதல். குறிப்பாக கூத்துக்கலையில் சதங்கை என்பது மிகவும் அவசியமானதொன்றாக உள்ளது. அச்சதங்கையினை செய்கின்ற போரதீவினைச் சேர்ந்த வேதவனம் என்பவரை நாகசக்தி கலை மன்றம் கௌரவித்திருக்கின்றது. அதேபோல கூத்துக்கலையில் சிறந்து விளங்கிய கொக்கட்டிச்சோலை கிராமத்தினை வசிப்பிடமாக கொண்ட மத்தள ஆசிரியர் ப.கதிர்காமநாதன் அவர்களுக்கு மத்தள வித்தகன் என்ற பட்டத்தினை வழங்கியிருக்கின்றது. கலைமன்றத்தின் செயற்பாடோடு இணைந்தவரும் கலைசெயற்பாட்டிற்கு ஆதரவளிப்பவரும், எழுத்தாளரும், ஓய்வுபெற்ற அதிபரும், நாகலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கான காவடி, கும்மி, காவியம் ஆகியவற்றினை எழுதியவருமான ஆரையூர் அருள் அவர்களைப் பாராட்டி செம்மொழிப்புலவர் என்ற பட்டத்தினையும் வழங்கியிருக்கின்றனர்.
வருடாந்தம் ஒவ்வொரு கூத்தினை 2003ம் ஆண்டில் இருந்து அரங்கேற்றி வருகின்றனர். அத்தோடு அவற்றினை ஆவணப்படுத்தும் பொருட்டு, ஒளிப்பதிவு செய்து இறுவெட்டாக வெளியீட்டும் வருகின்றனர். அலங்காரரூபன், பவளக்கொடி, நச்சுப்பொய்கை, வள்ளியம்மன் நாடகம், அபிமன்னன் சண்டை, சத்தியவான்சாவித்திரி, குருகேத்திரன் போர் போன்ற கூத்துக்கள் இறுவெட்டாக வெளியிடப்பட்டுள்ளன. 2003ம் ஆண்டில் இருந்து அரங்கேற்றப்பட்ட கூத்துத்தொடர்பான தகவல்களை கீழே அவதானிக்கலாம்.

# கூத்துநிகழ்வுகள்

## 2003 — கும்பகர்ணன் வதை (வடமோடி) மேடைக்கூத்து

| பாத்திரம் | நடிகர் பெயர் |
|---|---|
| கும்பகர்ணன் | மு.நமசிவாயம் |
| இராவணன் | ப.யோகராசா |
| மண்டோதரி | கே. ஜெயக்குமார் |
| விபிசனன் | ச.சபேஸ்கரன் |
| இராமன் | ம. கேதீஸ்வரன் |
| அண்ணாவியார் | க. மகாலிங்கம் |
| ஏட்டண்ணாவியார் | க. நாகராசி |

## 2004 — அரிச்சந்திரமயான கண்டம் (வடமோடி) மேடைக்கூத்து

| பாத்திரம் | நடிகர் பெயர் |
|---|---|
| அரிச்சந்திரன் | நா.மதிவதனன் |
| சந்திரமதி | நா. பாஸ்கரன் |
| விசுமாமித்திரர் | ம.கேதீஸ்வரன் |
| சுக்கிரன் | பே.புவிதரன் |
| பிராமணன் | ம.தனராசா |
| லேகிதாசன் | ச.லிங்கேஸ்வரன் |
| அண்ணாவியார் | க. மகாலிங்கம் |
| ஏட்டண்ணாவியார் | க. நாகராசி |

## 2005 — சராசந்தன் போர் (வடமோடி) மேடைக்கூத்து

| பாத்திரம் | நடிகர் பெயர் |
|---|---|
| சராசந்தன் | ம.கேதீஸ்வரன் |
| தருமர் | இ.குகநாதன் |
| வீமன் | ம.தனராசா |
| அருசுனன் | பே.ஜெயந்திரன் |
| நகுலன் | ச.லிங்கேஸ்வரன் |
| சகாதேவன் | ச. வரதன் |
| கிருஸ்ணர் | வ. வினோதன் |
| பரசுராமர் | ச.யோகராசா |
| அமுதவல்லி | கி. பாஸ்கரன் |
| அண்ணாவியார் | க. மகாலிங்கம் |
| ஏட்டண்ணாவியார் | க. நாகராசி |

## 2008 – நல்லதங்காள் (வடமோடி) மேடைக்கூத்து

| பாத்திரம் | நடிகர் பெயர் |
|---|---|
| நல்லதங்காள் | கி.பாஸ்கரன் |
| காசிராசன் | பே.யேந்திரன் |
| மகன் | தி.சிவகுமார் |
| மகன் | ப.ரசிகரன் |
| மகன் | இ.கிரிஜனன் |
| மகள் | இ.கிரிசாந் |
| மகன் | வ.திவாகரன் |
| மகன் | வி.சசிகரன் |
| மகன் | நா.ஜெகதீஸ் |
| மகன் | ந.தர்சன் |
| நல்லதம்பி | ம.கேதீஸ்வரன் |
| மந்திரி | க.தர்மேஸ்வரன் |
| காந்தாரி | சி.செல்வேந்திரன் |
| அண்ணாவியார் | க. மகாலிங்கம் |
| ஏட்டண்ணாவியார் | க. நாகராசி |

## 2010 – பகாசூரன்சண்டை (வடமோடி) மேடைக்கூத்து

| பாத்திரம் | நடிகர் பெயர் |
|---|---|
| பகாசூரன் | நா.பாஸ்கரன் |
| தருமர் | இ.குகநாதன் |
| வீமன் | செ.சுந்தரலிங்கம் |
| அருச்சுனன் | ம.கேதீஸ்வரன் |
| நகுலன் | ச.மகேந்திரவர்மன் |
| சகாதேவன் | சி.வினோ |
| புரோசனன் | ப.ரசிகரன் |
| தாய் | சி.செல்வேந்திரன் |
| குந்தி | செ.மதிகரன் |
| அண்ணாவியார் | க. மகாலிங்கம் |
| ஏட்டண்ணாவியார் | வெ.கணேசமூர்த்தி |

## ௨0௧௧ — சீதனக்கொடுமை (வடமோடி) மேடைக்கூத்து

| பாத்திரம் | நடிகர் பெயர் |
|---|---|
| போடியார் | செ.மேகநாதன் |
| விதானையார் | ம.குகநாதன் |
| மாசிலான் | கே.மௌனகுரு |
| காதலன் | இ.குகநாதன் |
| காதலி | வ.வினோதன் |
| போடியார் மனைவி | கி.பாஸ்கரன் |
| அண்ணாவியார் | ம.கேதீஸ்வரன் |

## நிர்முகன்வதை (தென்மோடி) மேடைக்கூத்து

| பாத்திரம் | நடிகர் பெயர் |
|---|---|
| பவளசேனை | ம.ஸ்ரீவித்தியா |
| அல்லி | கு.குபேதினி |
| சேனாதிபதி | சி.தேவகா |
| பத்தினி | ச.பிரசன்னியா |
| சேனாதிபதி | வ.திவாகரன் |
| நிர்முகன் | சி.டினுஸ்காந் |
| மந்திரி | ச.தனுஸ்காந் |
| அண்ணாவியார் | ம.கேதீஸ்வரன் |
| ஏட்டண்ணாவியார் | இ.குகநாதன் |

## ௨0௧௨ — நந்தியின் மகிமை (வடமோடி) களரிக்கூத்து

| பாத்திரம் | நடிகர் பெயர் |
|---|---|
| உலகநாச்சி | ப.ரசிகரன் |
| உலகநாதன் | கி.பாஸ்கரன் |
| திகடன் | செ.சுந்தரலிங்கம் |
| வேடன் | வ.வினோதன் |
| பட்டர் | நா.ஜெகதீஸ் |
| பட்டர் 2 | தி.சிவகுமார் |
| பட்டர் 3 | நா.முகில்வண்ணன் |
| பூசகர் | ச.லிங்கேஸ்வரன் |
| பறங்கியர் 1 | சி.சிவகாந்தன் |
| பறங்கியர் 2 | நா.பாஸ்கரன் |
| கட்டியக்காரன் | இ.கிரிசாந் |
| அண்ணாவியார் | ப.கதர்காமநாதன் |
| ஏட்டண்ணாவியார் | ம..கேதீஸ்வரன் |

## 2013 – அலங்காரரூபன் (தென்மோடி) களரிக்கூத்து

| பாத்திரம் | நடிகர் பெயர் |
|---|---|
| கட்டியக்காரன், தோழி | வி.ரசிகரன் |
| அதிவீரசூரன், சொக்கன் | த.யோகநாதன் |
| அதிவீரசூரன் மனைவி | செ.மதிகரன் |
| செகதனயாளி | செ.சுந்தரலிங்கம் |
| செகதனயாளி மனைவி | சி.டினுஸ்காந் |
| அலங்காரரூபி | க.மகேந்திரன் |
| அலங்காரரூபன் | ம.கேதீஸ்வரன் |
| தூதுவன், தலையாரி | சி.செல்வேந்திரன் |
| தூதுவன், தலையாரி | ப.ரசிகரன் |
| விறுகுதலையன் | அ.மோகநாதன் |
| மந்திரி | தி.சிவகுமார் |
| செட்டி | மு.நமசிவாயம் |
| கள்ளன் | நா.பாஸ்க்கரன் |
| அண்ணாவியார் | ப.கதிர்காமநாதன் |
| உதவி அண்ணாவியார் | பா.உதயகுமார் |
| ஏட்டண்ணாவியார | வெ.கணேசமூர்த்தி |

## 2014 – பவளக்கொடி (வடமோடி) களரிக்கூத்து

| பாத்திரம் | நடிகர் பெயர் |
|---|---|
| கிருஸ்ணர் | மு.நமசிவாயம் |
| தருமர் | கு.அரும்பொருள் |
| துரோபதை | கி.பாஸ்கரன் |
| வீமன் | நா.பாஸ்க்கரன் |
| அருச்சுனன் | ந.சுதன் |
| நகுலன்,வேடன் | ம.கேதீஸ்வரன் |
| சகாதேவன், வேடன் | ச.யோகராசா |
| அல்லி | க.செல்வராசா |
| தோழி | நா.முகில்வண்ணன் |
| புலேந்திரன் | அ.தர்சன் |
| தோழன், கட்டியக்காரன் | இ.கிரிசாந் |
| சேரம்புமன்னன் | செ.மேகநாதன் |
| பவளக்கொடி | க.மகேந்திரன் |
| சாம்புவன் | ந.பிரதீபன் |

காப்புமுனை

| | |
|---|---|
| சுமத்திரை | சீ.விஸ்வலிங்கம் |
| அண்ணாவியார் | ப.கதிர்காமநாதன் |
| உதவி அண்ணாவியார் | பா.உதயகுமார் |
| ஏட்டண்ணாவியார | வெ.கணேசமூர்த்தி |

## 2015 – நச்சுப்பொய்கை (வடமோடி) களரிக்கூத்து

| பாத்திரம் | நடிகர் பெயர் |
|---|---|
| கட்டியக்காரன் | இ.கிரிசாந் |
| துரியோதனன் | ந.சிவாரெத்தினம் |
| வேதாளம், கர்ணன் | சி.சிவகாந்தன் |
| சகுனி, எமன் | த.யோகநாதன் |
| துட்சாதனன், காளாமாமுனிவன் | வ.வினோதன் |
| தருமர் | கு.அரும்பொருள் |
| துரோபதை | க.செல்வராசா |
| வீமன் | நா.பாஸ்கரன் |
| அருச்சுனன் | ம.கேதீஸ்வரன் |
| நகுலன் | பா.ரேணுகாந் |
| சகாதேவன் | த.பரமேஸ்வரன் |
| சயிந்தவன் | மு.நமசிவாயம் |
| கிருஸ்ணர் | பே.ஜெயந்திரன் |
| யோகி, சிவன் | செ.மேகநாதன் |
| அண்ணாவியார் | ப.கதிர்காமநாதன் |
| உதவி அண்ணாவியார் | பா.உதயகுமார் |
| ஏட்டண்ணாவியார | வெ.கணேசமூர்த்தி |

## 2016 – அபிமன்னன் சண்டை (வடமோடி) களரிக்கூத்து

| பாத்திரம் | நடிகர் பெயர் |
|---|---|
| துரியோதனன் | செ.சுந்தரலிங்கம் |
| கர்ணன் | க.யோகநாதன் |
| சகுனி | க.செல்வராசா |
| துட்சாதனன், பிராமணர் | ந.பிரதீபன் |
| துரோணர் | பே.யேந்திரன் |
| சயிந்தவன் | வே.பிரகலாதன் |

| | |
|---|---|
| தருமர் | கு.அரும்பொருள் |
| துரோபதை | கி.பாஸ்கரன் |
| வீமன் | த.பரமேஸ்வரன் |
| அருச்சுனன் | ந.சுதன் |
| நகுலன் | வே.கோகுலதாஸ் |
| சகாதேவன் | பா.றேணுகாந் |
| துட்டைத்தூய்மன் | ச.தோசீலன் |
| கிருஸ்ணர் | மு.நமசிவாயம் |
| அபிமன்னன் | ம.கேதீஸ்வரன் |
| சுமத்திரை | சீ.விஸ்வலிங்கம் |
| கட்டியக்காரன் | சி.சிவகாந்தன் |
| அண்ணாவியார் | ப.கதிர்காமநாதன் |
| உதவி அண்ணாவியார் | பா.உதயகுமார் |
| ஏட்டண்ணாவியார | வெ.கணேசமூர்த்தி |

## 2017 – வள்ளியம்மன் நாடகம் (வடமோடி) களரிக்கூத்து

| பாத்திரம் | நடிகர் பெயர் |
|---|---|
| கிருஸ்ணர் | ந.பிரதீபன் |
| லக்சுமி | பஞ்சலிங்கம் |
| வேலநம்பி | த.யோகநாதன் |
| தங்கரூபன் | ச.யோகராசா |
| 2ம்வள்ளி | கி.பாஸ்கரன் |
| 1ம்வள்ளி | க.செல்வராசா |
| நாரதர் | ச.தோசீலன் |
| வேடன் | செ.சுந்தரலிங்கம் |
| காங்கேயன் | பா.ரேணுகாந் |
| பண்டாரம் | நா.பாஸ்கரன் |
| யானை | க.இரகுநாதன் |
| கட்டியகாரன் | ம.டினேஸ்கரன் |
| குறவன் | ம.கேதீஸ்வரன் |
| குறத்தி | பரமேஸ்வரன் |
| அண்ணாவியார் | பா.உதயகுமார் |
| உதவி அண்ணாவியார் | ப.கதிர்காமநாதன் |
| ஏட்டண்ணாவியார் | வெ.கணேசமூர்த்தி |

## 2018 — சத்தியவான் சாவித்திரி (தென்மோடி) களரிக்கூத்து

| பாத்திரம் | நடிகர் பெயர் |
|---|---|
| கட்டியகாரன் | ம.டினேஸ்கரன் |
| சாளுவராசன் | ந.சிவாரெத்தினம் |
| கோகிலாதேவி | உ.பஞ்சலிங்கம் |
| மந்திரி, எமதர்மன் | த.யோகநாதன் |
| சிவபெருமான் | இ.தங்கவேல் |
| இளம்சத்தியவான் | ம.கேதீஸ்வரன் |
| 2ம்சத்தியவான் | ந.சுதன் |
| கனகரெட்டிராசன் | சி.செல்வேந்திரன் |
| சேனாதிபதி | ப.ரசிகரன் |
| அசுபதிராசன் | பொ.திருக்கேஸ் |
| மாளவி | சீ.விஸ்வலிங்கம் |
| மந்திரி | ச.தோசீலன் |
| சாவித்திரி | பொ.கணபதிப்பிள்ளை |
| தோழி | ந.டனுஜன் |
| நாரதர் | பா.தங்கத்துரை |
| சித்திரபுத்திரர் | நா.பாஸ்க்கரன் |
| அண்ணாவியார் | ப.கதிர்காமநாதன் |
| உதவி அண்ணாவியார் | பா.உதயகுமார் |
| ஏட்டண்ணாவியார் | வெ.கணேசமூர்த்தி |

## 2019 — குருக்கேத்திரன் போர் (வடமோடி) களரிக்கூத்து

| பாத்திரம் | நடிகர் பெயர் |
|---|---|
| கட்டியக்காரன் | ச.சிந்துஜன் |
| குருகேத்திரன் | மு.நமசிவாயம் |
| சித்திரலேகை | க.செல்வராசா |
| கிருஸ்ணர் | ம.கேதீஸ்வரன் |
| சிவன், கருணன் | அ.மோகநாதன் |
| இயமன் | த.யோகநாதன் |
| இந்திரன், நாரதர் | பா.ரோஹுகாந் |
| மந்திரி, சகுனி | ப.ரசிகரன் |
| தருமர் | ந.சிவாரத்தினம் |
| துரோபதை, பெருந்திருவாள் | சீ.விஸ்வலிங்கம் |
| வீமன் | நா.பாஸ்கரன் |
| அருசுனன் | செ.தேவதாஸ் |
| நகுலன் | வே.கோகுலதாஸ் |
| சகாதேவன் | சோ.நடேசகுமார் |
| துரியோதனன் | பா.தங்கத்துரை |
| துச்சாதனன் | க.பரமேஸ்வரன் |
| அண்ணாவியார் | ப.கதிர்காமநாதன் |
| ஏட்டண்ணாவியார் | வெ.கணேசமூர்த்தி |

கூத்துக்களை ஆடி அரங்கேற்றுவதோடு மட்டும் நிறுத்திவிடாது பல இடங்களுக்கும் சென்று பழக்கியும் உள்ளனர். எடுத்துக்காட்டாக, காரைதீவு சண்முகா மகளீர் வித்தியாலயம், அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், கல்லடி கல்வி அபிவிருத்திச் சங்கம், கிழக்குப் பல்கலைக்கழகம், முனைக்காடு இந்து இளைஞர்மன்ற அறநெறிப்பாடசாலை போன்ற இடங்களில் பழக்கியமையினை குறிப்பிடலாம்.

இதேபோன்று வசந்தம், கும்மி, கரகம் போன்ற கலைகளையும் ஆற்றுகை செய்து வருடாந்தம் அரங்கேற்றுவதுடன், தற்கால பிரச்சினைகளை உள்ளடக்கிய வகையில், நகைச்சுவை, சீர்திருத்த நாடகங்களையும், புராண நாடகங்களையும் ஆற்றுகை செய்கின்றனர். நாகசக்தி கலைமன்றத்தின் கலைச்செயற்பாடுகள் முனைக்காடு கிராமத்தில் மாத்திரம் முன்னெடுக்கப்படாமல், படுவான்கரை, எழுவான்கரைப் பிரதேசங்களில் உள்ள பல ஆலயங்களிலும் ஆற்றுகை செய்யப்பட்டிருக்கின்றன. இதேபோன்று போட்டி நிகழ்வுகளிலும் நாகசக்தி கலைமன்றத்தினர் வருடாந்தம் பங்கேற்று பிரதேச, மாவட்ட, தேசிய ரீதியாக சாதித்துவருகின்றனர் இது தொடர்பிலான விபரங்களையும் கீழே அவதானிக்க முடியும்.

## போட்டி நிகழ்ச்சிகள்

| ஆண்டு | நிகழ்வு | நிலை | நிறுவனம் & திணைக்களம் |
|---|---|---|---|
| 2011 | கும்மி | 01 | கிழக்கு மாகாண எழுவானில் கலைவிழா |
| | வசந்தன் | 01 | |
| 2012 | வசந்தம் | 01 | பிரதேச கலாசார விழா |
| | கூத்து, வசந்தம், கும்மி | 01 | எழுவானில் கலை விழா |
| | கூத்து | 01 | மண்கமழும் மங்கல விழா |
| | நாடகம் | 01 | பிரதேச கலாசார விழா |
| 2013 | கூத்து, வசந்தன், காவடி | 01 | பிரதேச கலாசார விழா |
| | கூத்து | 01 | கிழக்கு மாகாணம் |
| | கூத்து | 01 | மண்கமழும் மங்கல விழா |

இவற்றுக்கு மேலாக தமிழர்களின் பண்பாட்டு வரவேற்பு நடனமாகவிருக்கின்ற "இன்னியம்" வரவேற்பு குழுவினரையும்

உருவாக்கியிருக்கின்றனர். முதன்முதலாக 2010ம் ஆண்டு இவ் இன்னியம் வரவேற்பு குழு உருவாக்கப்பட்டது. நாகலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த திருவிழாவின் போது இவ்வரவேற்பு நடனம் முதன்முதலாக ஆடப்பட்டது. ஆடப்பட்ட அதே ஆண்டில் பல்வேறு வரவேற்புகள் கிடைத்தன. பலரும் தமிழர்கள் பண்பாட்டை வளர்க்கும் செயற்பாட்டிற்கு ஆதரவளித்தனர். உற்சாகப்படுத்தினர். ஆனாலும் ஒருசிலர் இதுதொடர்பில் விமர்சனத்தினை கூறாமல் இல்லை. அவர்களின் விமர்சனங்களும் கருத்தில் கொள்ளப்பட்டது. நாகசக்தி கலை மன்றம் இன்றுவரை இன்னிய நடனத்திற்கு பெயர்போன மன்றமாகவே உள்ளது. இம்மன்றத்தின் நடனத்தினை ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு நிகழ்வுக்காக அழைக்கின்ற செயற்பாடுகளும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன தேசிய மாவட்ட, தேசிய, பிரதேச, கிராம ரீதியாக நடைபெறும் பல நிகழ்வுகளில் பங்கேற்று வருகின்றனர். குறிப்பாக நாட்டின் தலைவராக இருந்த சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களை வரவேற்பதற்கும், திருகோணமலையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை வரவேற்பதற்கும் இவ் இன்னிய வரவேற்பு நடனம் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. அதேபோன்று நாட்டின் எதிர்கட்சி தலைவர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உயரதிகாரிகள், வெளிநாட்டவர்கள் எனப்பலரையும் வரவேற்பதற்காக இன்னிய நடனம் ஆடப்படுள்ளது. இந்நடனத்தினை தம்மோடு மாத்திரம் வைத்துக்கொள்ளாது, முனைக்காடு விவேகானந்த வித்தியாலய மாணவர்கள், கொல்லநுலை விவேகானந்த வித்தியாலய மாணவர்கள், பண்டாரியாவெளி நாமகள் வித்தியாலய மாணவர்கள் ஆகியோருக்கும் பழக்கியிருக்கின்றனர். இதன்மூலமாக கலை இளம் சந்ததிக்கு பரப்பப்பட்டிருக்கின்றது.

கிழக்கு பல்கலைக்கழகத்துடன் இணைந்த வகையில், கலந்துரையாடல்களையும், நேர்காணல்களையும் கலைசார்ந்து நாகசக்தி கலைமன்றம் செயற்படுத்தியிருக்கின்றது. கலைமன்றத்தின் கலைஞர்கள் நாட்டுக்கூத்துக்கலையை கற்பிக்கும் விரிவுரையாளர்களாக இருந்து வருகின்றனர். குறிப்பாக ப.கதிர்காமநாதன், ம.கேதீஸ்வரன், இ.குகநாதன் ஆகியோர்களை சுட்டிக்காட்ட முடியும்.

2013.08.23ம் திகதி இந்தியா தஞ்சைப் பல்கலைகழக பேராசிரியர் கபிலன் உடனான சந்திப்பினையும், 10.10.2013ம் திகதி இந்தியா தஞ்சைப் பல்கலைகழக பேராசிரியர் முத்தையா, யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சிதம்பரநாதன், கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சி.ஜெயசங்கர் உனான கலந்துரையாடலையும், 01.12.2014ம் திகதி ருகுணு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் உடனான கலந்துரையாடலையும், இந்தியப் பல்கலைக்கழக பேராசிரியர் ஸ்ரீபன், இந்திய எழுத்தாளர் முத்துக்கிருஸ்ணன், இந்திய

பறைஇசைக் கலைஞர் மணிமாறன் மற்றும் கலைஞர்கள், அண்ணாவிமார்கள் மற்றும் விரிவுரையாளர்கள், மாணவர்கள் உடனான பாரம்பரிய கலைகள் பற்றிய கலந்துரையாடலை நாகசக்தி கலைமன்றத்தினர் நாகலிங்கேஸ்வரர் ஆலய முன்றலில் நடாத்தியிருக்கின்றனர். இவ்வாறு கலைசார் பல்வேறு தரப்பினரும் நாகசக்தி கலைமன்றத்தினருடன் கலந்துரையாடல்களிலும், சந்திப்புக்களிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

இலங்கையில் இருக்கக்கூடிய தேசிய தொலைக்காட்சிகளான ரூபவாகினி, வசந்தம், நேத்திரா, டான் ஆகிய தொலைக்காட்சிகளில் நாகசக்தி கலைமன்றத்தின் வசந்தன், நல்லதங்காள் கூத்து போன்றன ஒளிபரப்பட்டுள்ளன.

நாகசக்தி கலைமன்றமானது பிரதேச கலாசார பிரிவுடனும், பிரதேச செயலகத்துடனும் இணைந்து கலாசாரவிழா, பொங்கல் விழாவினையும், 09.09.2014ம் திகதி, கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கூத்து விழாவினை முனைக்காடு நாகலிங்கேஸ்வரர் ஆலய முன்றலிலும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பாரம்பரிய கலைகளின் சங்கமம் நிகழ்வினையும், பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட தீபாவளி சிறப்பு கவியரங்க நிகழ்வினையும் இணைந்து நாகலிங்கேஸ்வரர் ஆலய முன்றலிலே நடாத்தியிருக்கின்றது.

கலைச்செயற்பாட்டிற்கு தேவையான வாத்தியகருவிகளை, கொள்வனவு செய்தும், போட்டிகளில் வெற்றிபெற்றதன் மூலமாகவும் பெற்றிருக்கின்றனர். அதேபோன்று கூத்துக்கலைக்கான உடைகளையும், கூத்துக்கான சதங்கையினையும் செய்துள்ளமையுடன், ஒப்பனையாளர்களையும் உருவாக்கியுள்ளனர்.

நாகசக்தி இந்து இளைஞர் மன்றம் கிராமத்தில், பிரதேசத்தில் இருக்கின்ற பல கலைஞர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்திருக்கின்றனர். நாடகங்களின் ஊடாக இலைமறை காயாக இருந்த நடிகர்கள் பலரை சமூகத்திற்கு வெளிக்காட்டியிருக்கின்றனர். கல்விமான்கள், சாதாரணமக்கள் என அனைவரையும் இணைத்து எவ்வித வேறுபாடுகளும் இன்றி கலைச்செயற்பாட்டினை முன்னெடுத்திருக்கின்றமையுடன், நாடகங்களை எழுதுவதிலும் அவற்றினை பழக்குவதிலும் இ.குகநாதன், சி.சிவகாந்தன், வ.வினோதன் ஆகியோர்களின் பங்கு அதிகமாக இருந்திருக்கின்றது. அதேபோன்று, வசந்தன் பழக்குவதில் ம.கேதீஸ்வரன், நல்லதம்பி ஆகியோர் அதிக ஆர்வத்தினைச் செலுத்தியிருக்கின்றனர். சிறப்பான சேவையினை கிராம, பிரதேச, மாவட்ட ரீதியில் கலைக்காக

வழங்கியமையினை கௌரவித்து கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற இளம் கலைஞர் விருதினைக்கூட நாகசக்தி இந்து இளைஞர் மன்றத்தின் உறுப்பினர்களான ம.கேதீஸ்வரன், இ.குகநாதன் ஆகியோர்கள் பெற்றிருக்கின்றனர். இதற்கு நாகசக்தியின் அத்திவாரமே உரமிட்டதெனலாம். இதேபோன்று எமது கிராமத்தின் கலைஞர் வெ.கணபதிப்பிள்ளைக்கு லக்ஸ்டோ மீடியா நெட்வேர்க் அமைப்பினால் கலைத்தீபம் பட்டமும், சமூகமாமணி விருதும் கிடைக்கப்பெற்றுள்ளன.

வாத்தியங்களை இசைக்ககூடிய கலைஞர்கள் பலரை நாகசக்தி கலை மன்றம் உருவாக்கியிருக்கின்றது. குறிப்பாக மத்தளம், தவில் வாசிக்க கூடியவர்களாக ம.கேதீஸ்வரன், கி.பாஸ்க்கரன், ச.யோகராசா, சி.கேமாகரன், செ.சுந்தரலிங்கம் ஆகியோர் உருவாக்கப்பட்டிருக்கின்றனர். நாதஸ்வரம் வாசிக்ககூடியவராக ச.மகேஸ்வரன் உருவாகியிருக்கின்றார். இவ்வாறு பல கலைஞர்களை உருவாக்கியிருக்கின்ற பெருமை நாகசக்தி இந்து இளைஞர் மன்றத்திற்கே உள்ளது. அதேபோன்று பஜனைப்பாடல்களை, கூத்தினை எழுதக்கூடிய எழுத்தாளர்களும் உருவாகியிருக்கின்றனர். நாகசக்தி இந்து இளைஞர் மன்ற உறுப்பினர் ம.கேதீஸ்வரனால் எழுதப்பட்ட பஜனை பாமாலை, கூத்தியல் என்ற நூல்களும் நாகசக்தி இந்து இளைஞர் மன்றத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

வயது முதிர்ந்த பெரியவர்களைக் கொண்டு அவர்களது அனுபவங்களையும், அவர்களது கலைகளையும் மேடையிலே ஆற்றுகை செய்த பெருமையும் இம்மன்றத்திற்கே உரியது இலைமறை காய்களாக இருந்த இக்கலைஞர்கள் மேடையேற்றப்பட்டபோது, அவர்கள் கொண்டிருந்த மட்டில்லா மகிழ்ச்சியும் இத்தருணத்தில் எடுத்துக்காட்டத்தக்கதே. அதேபோன்று ஆரையூர் அருள் எழுதிய நாகலிங்கேஸ்வரர் காவியம், காவடி, கும்மி இதனை மன்றத்தின் உறுப்பினர் மு.நமசிவாயம் பாடியிருக்கின்றார்.

மக்கள் மன்றம் என்ற பெயரில் ஞாயிற்றுக்கிழமைகளில் கிராமத்தில் உள்ள பெரியவர்களை அழைத்து, கடந்த கால அனுபவங்களை கலந்துரையாடல் மூலமாகப் பெற்று அதனை ஆற்றுகை செய்த பெருமையும் இம்மன்றத்திற்கே உரித்தாகும்.

## பொதுப்பணி

முனைக்காடு கிராமத்தில் இடம்பெறுகின்ற மரணவீடுகளுக்குச் சென்று அங்கு சரீர உதவிகளை மேற்கொள்வதுடன், ஒலிபெருக்கியினை ஒலிபெருக்கச்செய்து அறிவித்தல் போன்ற செயற்பாடுகளிலும், வைகுந்த அம்மானை பாடுதலிலும் ஈடுபட்டு வருகின்றனர். பாடசாலைகளில், பொது

இடங்களில் முன்னெடுக்கப்படும் நிகழ்வுகளில் பங்கேற்று அவர்களுக்கான ஒத்துழைப்பினையும் வழங்கி வருகின்றது. தமிழை வளர்க்கும் பொருட்டு மட்டக்களப்பு தமிழ்சங்கத்துடன் இணைந்து நிகழ்வினையும் நடாத்தியும் உள்ளது. பொது இடங்களில் சிரமதானப்பணிகளை மேற்கொள்ளல், கிராமத்தில் நடைபெறும் சீர்கேடான பிரச்சினைகள் இல்லாமல் செய்தும், பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்டவர்களை அணுகி சமரச பேச்சுக்களிலும் ஈடுபடுகின்றனர். அனர்த்தங்கள் ஏற்படுகின்ற போது மக்களுக்கு தேவையான உதவிகளையும் வழங்கி வருகின்றனர். இதைவிடவும் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள, அம்பாறை பிள்ளையார் ஆலய உற்சவத்தின் போது மட்டக்களப்பு மாவட்ட மக்களின் திருவிழாவன்று அங்கு சென்று வரவேற்பு நடனங்களை இலவசமாக செய்துவருகின்றனர்.
இவ்வாறு பல்வேறு துறைகளின் ஊடாக நாகசக்தி இந்து இளைஞர் மன்றம் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றமையுடன், எல்லாத்துறைகளிலும் துறைசார் வல்லுனர்களை உருவாக்கியும் வருகின்றனர். இதனால் நாகசக்தி இந்து இளைஞர் மன்றத்தினுள்ளே பல ஆளுமைமிகுந்த திறமையாளர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர்.

உசாத்துணை :


- 2015, முகவரி, பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமுக அபிவிருத்தி ஒன்றியம்.
- 2012, தளிர், எழுதளிர், முனைக்காடு
- மட்டக்களப்பு மான்மியம்
- நாகசக்தி இந்து இளைஞர்மன்ற கூட்டறிக்கை
- நாகசக்தி இந்து இளைஞர்மன்ற சம்பவத்திரட்டுப்புத்தகம்
- துண்டுப்பிரசுரம்
- ஒளிப்பேழை
- நேர்காணல்
- www.munaiman.blogspot.com

திரு.மூ.அருளம்பலம் (ஆரையூர் அருள்)

# நான் கண்ட நாகசக்தி

வந்தாரை வரவேற்று வாழ்வாங்கு வாழ வைக்கும் மீன்பாடும் தேகத் தென்கிழக்கே, மணமுனை தென்மேற்கு பிரதேசத்தில் கொடிகட்டிப்பறக்கும் முனைக்காடு, தான்தோன்றீச்சரத்தின் கிழக்கே ஆதரிப்பால் காப்புமுனை, ஈச்சநகர், புற்றடிக்கண்டமென்று போற்றி புகழ் முனையூரில் பண்டுதொட்டு இன்றுவரை கல்வி வளர்ச்சியோடு கலைவளர்ச்சியும் ஒரு கொடியில் பூத்த இருமலர்களாய் பூத்து அட்டதிக்கும் மணம் பரப்பிக்கொண்டே இருப்பதே இக்கிராமத்தின் சிறப்பம்சமாகும். ஆரம்பகாலம் முதலே தமிழரின் பாரம்பரிய கலையான கூத்துக்கலையை மங்காது, மழுங்காது, காத்துவரும் பெருமை முனையூரின் முனைப்பாகவே இருந்து வருகின்றது. இதற்கு உந்து சக்தியாக இருந்து உயிரூட்டுவது நாகசக்தி கலைமன்றம் என்றால் அது மிகையாகாது.
நான் 1992 இலிருந்து முதலைக்குடா ஸ்ரீ கோபால் மகா வித்தியாலயத்தில் கணித ஆசிரியராக, பிரதி அதிபராக கடமையாற்றிய காலத்தில் ஆரம்ப வகுப்புத் தொடக்கம், கல்விப் பொதுத்தராதர உயர்வகுப்பில் கல்வி கற்ற பெரும்பான்மையானவர்கள் முனையூர் மாணவர்களாகவே இருந்ததோடு, பாடசாலைக்கற்றலிலும், கலைநிகழ்வுகளிலும் மிகுந்த ஆர்வமும், ஈடுபாடு முடையவர்களாக இவர்கள் இருந்ததனால், இக்கிராமத்தில் எனக்கு பிடிப்பு ஏற்பட்டது.

முனைக்காடு நாகசக்தி கலை மன்றம் கலை, இலக்கியம், சமூகசேவை, ஆன்மீகத்தொண்டு ஆகிய பல்வேறு துறைகளிலும் மிகவும் அர்ப்பணிப்போடும், உற்சாகத்துடனும் உத்வேகத்துடனும் ஈடுபட்டு என்றும் பொது மக்கள் பார்வையிலிருந்து விலகாமலும் விலக விரும்பாமலும் அவர்களுக்குச் சேவை மூலம் எமது கலை, கலாசார, பண்பாட்டு, விழுமியங்களை கட்டிக்காத்து பசுமரத்தாணியாக பதிய வைத்து கொண்டு வருவதில் மிகுந்த பங்காற்றுகின்றது. வாழ்வின் மெய்மையைக் கலைப்படிமத்தின் வாயிலாக விசுவாசத்துடன் வெளியிடுவதையே அதன் குறிக்கோளாக கொண்டுள்ளது.

அக்குறிக்கோளை அடைவதற்காக நாகசக்தி கலைமன்றத் தலைவர், செயலாளர், பொருளாளர், உறுப்பினர்கள் எத்தனையோ இடையூறுகளுக்கு மத்தியிலும்

கூட்டுப்பொறுப்புடனும், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்குடனும், சகிப்புத்தன்மையுடனும், பொறுமையுடனும், மற்றவர்கள் கருத்துக்களுக்கு செவிமடுத்தல், எல்லோரையும் அரவணைத்து செயற்படல், முரண்பாடுகளை முறையாகத் தீர்த்தல், மூத்தோர் வார்த்தைக்கு மதிப்பளித்தல் போன்ற பண்பான, பணிவான செயற்பாடுகளினால் படிமுறையாக வளர்ச்சியுற்று இன்று இப்பிரதேசத்திலுள்ள ஏனைய கலைமன்றங்களுக்கு எடுத்துக்காட்டாக மிளிர்கின்றதென்பதனை அழுத்தம் திருத்தமாகவும், ஆணித்தரமாகவும் கூறக்கூடியதாக உள்ளதனை எவரும் மறுக்கவோ, மறுதலிக்கவோ முடியாது. ஆண்டுக்காண்டு அதன் சேவைகள் நீண்டு கொண்டே செல்வது நிதர்சனமாக உள்ளது.

எந்த கலையிலக்கிய மன்றங்களின் இயங்கியல் அடிப்படையில் நவீன காலத் தமிழ் கலையிலக்கிய போக்குகள் மறுமலர்ச்சி, புதியசெவ்வியல், புனையியல், நடப்பியல், குறியீட்டியல் என ஐவகைக்குள் அடக்கப்படுகின்றன. இவைகளை செம்மையாக உள்வாங்கி செயற்படுத்திச் செல்வதில் நாகசக்தி கலை மன்றம் முன்னிலையில் உள்ளது.

மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் எத்தனையோ கலைமன்றங்கள் இருக்கின்ற போதிலும் முனையூர் நாகசக்தி கலைமன்றத்திற்கு எம்மன்றமும் இணையாகாதேனனில் இம்மன்ற உறுப்பினர்கள் அனைவரிடமும் சொல்லரிய கலைத்திறமைகள் உள்ளத்து உணர்வுகளோடு பின்னிப்பிணைந்து காணப்படுவதினால் இவ்வமைப்பிலுள்ள பட்டதாரிகள், படித்தவர்கள், விவசாயிகள், உத்தியோகத்தர்கள், மீனவர்கள் அனைவரிடமும் ஏதோவொரு திறமை காணப்படுகின்றன. நாவன்மையுடையோர், இனிய குரலுடையோர், தலைமைத்துவப் பண்புடையோர், புலமைத்துவமுடையோர், ஒப்பனையாளர்கள், மத்தளவித்தகர்கள், மேடை, களரி அமைப்பாளர், அலங்கரிப்பாளர், அறிவிப்பாளர்கள், ஊடகவியலாளர், விற்பண்ணர்கள் என கலை இலக்கியத் துறையில் ஆற்றல் அனுபவமுள்ளவர்களைக் கொண்ட ஒரு கலைப்பூந்தோட்டமாக நாகசக்தி கலைமன்றம் விளங்குகின்றது.

நாகசக்தி கலை மன்றம் 2008ம் ஆண்டு சட்டபூர்வமாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டது.

## நாகசக்தி கலை மன்றத்தின் செயற்பாடுகள்.

மக்கள் சேவையே மகேசன் சேவையென மக்களுக்கான நலநோம்பும் சேவைகளை நல்லிதய சுத்தியுடன் ஆற்றிவரும் நாகசக்தி கலை மன்றம், அறநெறிவகுப்புக்களை நடாத்துவதனூடாக மாணவர்களுக்கு அறநெறிப்போதனைகளோடு ஆன்மீக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல், கலையிலக்கிய மறுமலர்ச்சியை ஏற்படுத்த கலையிலக்கியப் போட்டிகளை நடாத்தி பரிசில்கள் வழங்கி ஊக்கப்படுத்தல், உள்ளூர்க் கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவித்தல், ஆலயத்தில் பஜனைபாடுதல், கூத்து நாடக உடைகள் தயாரித்தல், ஒப்பனை செய்தல், பாவோதல், போட்டிகளை நடாத்துதல், பட்டிமன்றம் நடாத்துதல், கூத்து நாடகமுடிகள், ஆயுதங்களான வில்லம்பு, கட்டாரி, தண்டாயுதம், வாள் போன்றவற்றோடு யானை, எருது, மயில் போன்ற வாகனங்களை உருவாக்குதல், மத்தளவித்தகரை உருவாக்குதல், அண்ணாவிமாரை உருவாக்குதல், 2010ம் ஆண்டிலிருந்து தமிழ்கலை வாத்தியமான "இன்னியம்" குழுவமைத்து பயிற்சியளித்து பல ஆலய நிகழ்வுகள், பெருவிழாக்கள், பாடசாலை நிகழ்வுகளுக்கு சேவையடிப்படையில் சேவைபுரிதல், உள்ளூர் எழுத்தாளர்களின் நூல்வெளியீடுகள், ஆலய பக்திப்பாடல் இறுவெட்டுக்கள் வெளியீடுகள், கலை கலாசார பண்பாடுகளை காணொலிகளாக தயாரித்து, ஆவணக்காப்பகமாக செயற்படல், ஆண்டுதோறும் வடமோடி, தென்மோடி, வசந்தன் கூத்துக்களைத் தயாரித்து அரங்கேற்றுதல், நாட்டார் கலைகளான கும்மி, கரகம், காவடி, கோலாட்டம், வில்லுப்பாட்டு, பட்டிமன்றம், தெருக்கூத்து போன்ற நிகழ்ச்சிகளைத் தயாரித்து நெறியாள்கை செய்து மேடையேற்றுவதோடு பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய மட்ட கலை, கலாசாரப் போட்டிகளிலும் பங்குபற்றி பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்று வருகின்றனர்.

இவ்வாறு எத்தனையோ சேவைகளை சமுதாய மறுமலர்ச்சிக்காக தன்னலங்கருதாது எந்நாளும் எந்நேரமும் முழுமனவிருப்புடனும் அர்ப்பணிப்புடனும் சேவையாற்றிவரும் நாகசக்தி கலை மன்றத்தின் சேவை காலந்தோறும் தொடர எல்லாம் வல்ல தான்தோன்றீஸ்வரரும், நாகலிங்கேஸ்வரரும் நல்லருள் புரிய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

திரு.ஜி.நமசிவாயம் (ஆசிரியர்)

# முனைக்காடு மண்ணுக்கு பெருமை சேர்த்த நாகசக்தி

படுவான்கரை பெருநிலப் பரப்பின் பாலோடு தேமாங்கனியும் அழகிய வயல்வெளியும் வந்தோரை வரவேற்று அன்னமிடு நன்னெறியும் காடும், ஆறும், வயலும், குளமும் நன்னீரும் இம்மண்ணுக்கே கிடைத்த அருங்கொடை.

இத்தனை அழகிற்கும், மெருகூட்ட ஆங்காங்கே அமைந்த ஆலயங்களும் அதனால் நெறிப்படுத்தப்படும் கலை அமைப்புக்களும் இவ்வூரின் உறவு பாலமாய் திகழ, கூத்தும், பாட்டும், கும்மி, கரகம், காவியம், சிந்து என பலகலைகள் தோன்றி பெருவிருட்சம் ஆனதும் இம்மண்ணில்தான்.

இத்தகையதோர் வரலாற்றுப் பின்னணியில் தான் முனைக்காடு நாகசக்தி கலைமன்றத்தின் கலைச் செயற்பாடு ஆரம்பித்தன.

2002ம் ஆண்டு நாகசக்தி இந்து இளைஞர் மன்றம் எனும் நாமத்தோடு இக்கலை மன்றத்தின் கலைச்செயற்பாடு ஆரம்பித்தன. 2003ம் ஆண்டு அரங்கேற்றம் செய்யப்பட்ட கும்பகர்ணன் வதை மேடைக்கூத்து அனைத்து மக்களினதும் பெரு ஆதரவையும் வரவேற்பையும் பெற்ற கூத்தாக காணப்பட்டதுடன் அக்கூத்தே கூத்துக்கலையை மிளிரச் செய்வதற்கு வித்திட்டதாக காணப்படுகின்றது.

நாகசக்தி கலை மன்றமானது கலை செயற்பாடுகளை செவ்வனே ஆற்றிவருகின்றது. ஒவ்வொரு வருடமும் ஒரு கூத்து புதிதாக பழக்கப்பட்டு அரங்கேற்றம் செய்யப்படுவதும் பின்னர் ஆலயங்கள் தோறும் அவை ஆடப்படுவதும் சிறப்பாகும். பவளக்கொடி, அலங்காரரூபன், சத்தியவான் சாவித்திரி, நச்சுப்பொய்கை நல்லதங்காள், அபிமன்னன் என பல கூத்துக்கள் ஆடப்பட்டுள்ளன.

அதுமட்டுமின்றி நாகலிங்கேஸ்வரர் உற்சவத்தின் போது இரு இரவுகள் கலைநிகழ்வுகளையும் கலைச் செயற்பாடாக முன்னெடுத்து வருகின்றனர். 2019ம் ஆண்டின் கலைச்செயற்பாடாக குருக்கேத்திரன் போர் புதிதாக பழக்கப்பட்டு 22.06.2019ம் திகதி ஆலய முன்றலில் அரங்கேற்றம் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பவளக்கொடி கூத்தானது 18 மேடைகளில் ஆடப்பட்டது. மட்டுமின்றி தேசிய மட்டத்திலும் 1ம் இடத்தை பெற்றதென்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். பல்நிலை சிறப்புக்கொண்ட கலைஞர்கள், கலைமன்றத்தில் அங்கத்துவம் பெறுவதும் கலைமன்ற சிறப்பான செயற்பாட்டுக்கு காரணமாக அமைகின்றன.

இவற்றிற்கு அப்பால் 2017ம் ஆண்டு ஆலய வரலாறு கூறும் பக்தி, காவியம், காவடி, கும்மி என்பன வரலாற்று ஆவணமாக பக்தி பதியமாக பாடி வெளியிடப்பட்டதும் சுட்டிக்காட்டப்பட வேண்டியதுமாகும். ஆரையூர் அருள் அவர்களின் கவிவரியில் இப்பாடல் ஆக்கப்பட்டது.

இவை எல்லாவற்றிற்கும் ஆலயத்தின் அமைவிடமும் மக்கள் கொடுக்கும் ஒத்துழைப்பும் ரசிகர்களின் வரவேற்புமே காரணம் என்பேன். கூத்து என்றால் கன்னங்குடா கலைஞர்களால் தான் கூத்தை சிறப்பாக ஆடமுடியும், பாடமுடியும் என்ற சித்தாந்தத்தை கன்னன்குடா கலைமன்றத்தால் அரங்கேற்றப்பட்ட நந்தியின் மகிமையை, நாகசக்தி கலைமன்றத்தால் ஆடப்பட்ட உலகநாச்சி முந்தி நின்று முதலிடம் பெற்றது எதுவானாலும் கலை வளரவேண்டும் கலைஞன் கௌரவப்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் நாகசக்தி கலைமன்றத்தின் தூரநோக்கு. இவ்வாறான தூரநோக்கு சிந்தனைக்கு இக்கலை மன்றம் அவ்வவ் கால கட்டத்தில் பல சவால்களை ஏற்றும் வந்திருக்கின்றது. கலைஞர்களின் ஒத்துழைப்பு இன்மை, நேரமின்மை, வேலைப்பழு, பொறாமை, பணவசதியின்மை போன்ற பல விடயங்கள் இக்கலை மன்றத்தின் மீது ஆதிக்கம் செலுத்தின. எது எப்படி இருப்பினும் அனைத்தையும் சாதகமாக்கி தனக்கென தனித்துவமான முன்னேற்ற பயணத்தில் இக்கலை மன்றம் ரதம் ஏறி செல்கின்றது.

ஆக முனைக்காடு தாய் மண்ணின் பெருமையை உலக அரங்கில் சுவாசிக்க வைத்த பெருமை நாகசக்தி கலைமன்றத்திற்கே

உரித்தாகும். கிராமிய நடனம்(இன்னியம்) ஊடாக ஆண்டவனையும் அரசியல் தலைமைகளையும் அறிஞர் பெருமக்களையும் வரவேற்ற வரவேற்பு பாதை மகத்தானது. 1ரூபாய் பணத்தை ஏனும் எதிர்பாராமல் பொதுநல நோக்கோடும், இறைபக்தியோடும் இக்கலைமன்ற கலைஞர்கள் ஒவ்வொருவரும் திறந்த மனதோடு சேவை செய்கின்றனர்.

எனவே எது எப்படி இருந்தாலும் ரதத்தில் ஏறி வேகமாய் பயணிக்கும் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் சொர்க்கத்தின் வாயில் என்றோ ஒரு நாள் திறந்தே இருக்கும் என்பதில் ஐயமில்லை. அறைக்குள் ஆடி அம்பலத்தில் அரங்கேற்றும் போது ஏற்படும் வேதனைகள் கொஞ்சம் நெஞ்சமல்ல. கூத்தாடி குண்டி நெளிப்பதும் காட்டானை கட்டியடிப்பதும் ஆத்தாதவன் வேலை எனக்கூறி தூற்றும் சில பெற்றோர் குறித்த பழமொழிக்கு அறிந்து சரியான ஆர்வத்துடன் புதிதாய் சிந்தித்து செயலாற்ற வேண்டும் என அன்புடன் வேண்டுகின்றோம். இந்த அண்டத்தின் முதல் கூத்தன் நடராசா பெருமான் இவரே முதல் கூத்து ஆடியவர்.

எனவே பிழையான அர்த்தங்களையும் பிழையான பொருட்களையும் விட்டு பிள்ளைகளை வழிப்படுத்தி கலைச் செயற்பாட்டில் ஈடுபட வழிசமைக்க வேண்டும் என அன்போடு அழைக்கின்றோம்.

திரு.இ.குகநாதன் (ஆசிரியர்)

# நாகசக்தியின் நாடக பயணம்*

கலை சமூகத்தை மாற்றக்கூடிய மாபெரும் ஆற்றல் கொண்டவை. அதனடியாக 2002 இல் இருந்து இற்றைவரை பண்மைத்தன்மையான கருப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு பல ஆற்றுகைகள் இடம் பெற்று இருக்கின்றன. பாரம்பரிய கலைவடிவங்கள் மற்றும் நவீன அரங்க வடிவங்கள் சமதையாக முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக படச்சட்ட அரங்கில் ஆண்டுதோறும் செய்யப்படுகின்ற கலை விழாவினை சுட்டிக்காட்டலாம். நாகசக்தி கலை மன்றம் 1990களுக்கு முன் மின்னொளி கலாமன்றம் எனும் பெயருடனும் பின் குறிப்பிட்ட சிலகாலங்கள் இயக்க நிலை குறைவடைகிறது. ஆலய உற்சவத்தில் இரவு வேளைகளில் கூத்து, கரகம், கலை ஆற்றுகைகளுடன் நாடகங்களும் மேடையேற்றப்பட்டன. இதில் பக்கத்து வீடு பத்துலெட்சம் எனும் நாடகம் ஆரம்பகால நாடக செயற்பாடாக அமைவதோடு பலரும் பாராட்டுக்களைப்பெற்ற நாடகமாகக் கொள்ளலாம்.

பிற்பட்ட காலங்களில் குறிப்பாக 2002ம் ஆண்டுக்கு முன்னர் முனைக்காடு ஸ்ரீ சித்திவிநாயகர் கண்ணகி அம்மன் ஆலய இந்து இளைஞர் மன்றத்தினர் நாகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கலைநிகழ்வுகளை செய்திருக்கின்றனர். குறிப்பாக உற்சவகாலங்களில் சிறப்பிக்க இரவுகளில் இடம்பெற்றிருக்கின்றது 2002ம் ஆண்டு நாகசக்தி கலை

மன்றத்தினர் கலைநிகழ்வுகளை தாங்களே செய்யத்திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றது. இதில் தங்களது ஆற்றுகையாக பொன்னம்பலப்போடியார் என்ற நாடகத்தினை கொள்ளலாம். இந்நாடகம் விவசாயம் செய்யும் ஒரு போடியார் தொழிலாளர்களைச் சுரண்டி வாழ்தலினை நகைச்சுவையாக கூறும் நாடகமாகும்.

தொடர்சியாக ஆண்டுதோறும் பல நாடகங்கள் ஆற்றுகை செய்யப்பட்டன. இக்கால கட்டங்களில் நாகசக்தியின் தலைமையில் கலை நிகழ்வு இடம்பெற்றாலும் வெளி இடங்களிலிருந்தும் நாடகங்கள் கொண்டவரப்பட்டன. பின்னர் இந்நிலை மாறி 2008ம் ஆண்டுக்கு பின்னர் அனைத்து கலை நிகழ்வுகளும் மன்றத்தினாலேயே செய்யப்படுகின்றன. இக்காலத்தில் நாகசக்தியின் நாடகப் பயணத்தில் மாற்றம் ஏற்படுகிறது. நாடகமும் அரங்கியலை தனிப்பாடமாக தெரிவு செய்து பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பாடமாக கற்கும் நாகசக்தி மன்றத்தின் உறுப்பினர்கள் பல்கலைக்கழகம் தெரிவுசெய்யப்பட்டதனடியாக நாடகம் நுணுக்கமாக பயிற்சியளிக்கப்பட்டு காட்சியமைப்பு, இசையமைப்பு, உடை ஒப்பனை என்ற பார்வையில் காத்திரத்தன்மையுடன் அமைகின்றது. அத்துடன் நாடக அரங்கும் நியதிகளுடன் கட்டப்பட்டன. இக்காலத்தில் சொர்க்கமும், நரகமும் மான், கண்ணகி வழக்கு, பிள்ளை அழுத கண்ணீர், தேவலோக யானை, ஏகலைவன், செம்மனச்செல்வி, அரிச்சந்திரன், விலையா? கேள்வியா?, போதை, நுண்கடன், மாறிய உலகு, தளிம்பு, அழியும் உலகம், அரக்கர்படை அழிகிறது, அதியமான் போன்ற பல நாடகங்கள் காட்சி இசையமைப்பு ரீதியாக பார்க்கப்பட்டன. 2018ம் ஆண்டு கலை மன்ற உறுப்பினர்களால் முனைக்காடு விவேகானந்த வித்தியாலய மாணவர்களைக் கொண்டு பழக்கப்பட்ட வேட்கை தேசிய விருதினைப்பெற்ற நாடகம் நாகசக்தி கலை அரங்கில் ஆற்றுகை செய்யப்பட்டது.

காட்சி அமைப்பும் சிறப்பாக மேற்கொண்டும் ஆற்றுகை செய்யப்பட்டன மேற் கூறப்பட்ட நாடகங்கள் யதார்த்த பாணியிலும் யதார்த்த விநோத பாணியிலும் அளிக்கை செய்யப்பட்டன நாகசக்தியினால் நகைச்சுவை நாடகங்களும் ஆற்றுகை செய்யப்படுகின்றன. இவை 2002ம் ஆண்டிலிருந்து இற்றைவரை மேடையேறுகின்றன. அதில் பொன்னம்பலப்போடியார் நாடகம் ஆரம்ப நாடகமாகக் கொள்ளலாம். இந்நாடகம் பார்வையாளர்களை அதிகம் சிரிக்கவைத்த நாடகமாக காணப்பட்டன. தொடர்ச்சியாக சமூகசீர்திருத்த நாடகங்களும் பல தலைப்புக்களில் நகைச்சுவைப்பாங்காக ஆற்றுகை செய்யப்பட்டன. அண்டாவயிறன் அடங்காப்பிடாரி, வாங்க வாஸ்துப்படி பெயர்மாற்றலாம், எந்திர மனிதர், ஓலக்கால் சீலக்கால், சோம்பேறி, மன்னர் ஓமக்குஞ்சி, சிறிசுகள் விளையாட்டும் பெரிசுகள் கைகலப்பும், சிவயோகி பதுக்கன்சாமியார், நம்மட டொக்டர், பென்குச்சி, உரல்குத்தி, நம்ம ஊருக்குள் வரும் ஆபிரிக்காசிலை, கோபாலும் ஆறுதிருடர்களும், எமலோகத்தில் இன்று, மன்னர்வீச்சுலவன் போன்ற பல நாடகங்களை எடுத்துக்காட்டலாம். அதிகம் நடிப்பு பயிற்சி வழங்கப்படாமல் குறிப்பிட்ட நாட்களுக்குள் திட்டமிட்டு செய்யப்பட்டவை ஆனால் வேட்கை நாடகம் ஏறத்தாள ஆறு மாதங்கள் கடும் பயிற்சி அளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

நாகசக்தி கலை மன்றத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தாளலயம் மிக முக்கியமானது இவை சமூக மட்டத்தில் வரவேற்பினையும் தாக்கத்தினையும் ஏற்படுத்திய கலையாற்றுகையாக சுட்டிக்காட்டமுடியும். அந்தவகையில் மகளீர் மன்ற உறுப்பினர்களைக்கொண்டு 2003ம் ஆண்டு செய்யப்பட்ட குடிகார வாழ்கை என்ற தாளலயம் பல அரங்குகளில் ஏறியது. அத்துடன் இளவயதில் திருமணம், மற்றும் டொக்டர் கைப்புள்ள, திருமதி மௌனகுருவின்

திருக்கல்யாணம், உழவுத்தொழில், குடிபோதை என்ற நகைச்சுவை தாளலயங்கள் பெரும் வரவேற்பை பெற்றவை நாகசக்தியின் நாடகப்பயணத்தின் சமூக மட்டத்தில் செய்த வீதி நாடகங்களையும் குறிப்பிட வேண்டும். இவை கிராமங்கள்தோறும் நடத்தப்பட்டிருக்கின்றது. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட ரீதியாக அதிக இடங்களில் மதுபோதை, ஊழல், அனர்த்தம், இளவயது திருமணம் என பல தொனிப்பொருள்களில் மன்ற உறுப்பினர்களால் மேற்க்கொள்ளப்பட்டிருக்கின்றது.

நாகசக்தியின் நாடகங்கள் பல பிரதேசம் மாவட்டம் தேசியம் என பல விருதகளைப் பெற்றிருக்கின்றது. அத்துடன் நாடகப் பயணத்தின் மூலம் இளம் சிறுவர்கள் ஆளுமையுள்ளவர்களாக மாறுகின்றனர். மேலும் பல சிறுவர் நாடகங்கள் மேடையேற்றப்படுகின்றன. யானையும் சிட்டுக்குருவியும், பிள்ளை அழுத கண்ணீர், தம்பிவந்த தாடி ஆடு, காட்டில் ஒருகளியாட்டம் போன்ற நாடகங்களை குறிப்பிட முடியும். அதேபோன்று, இறால்வளர்ப்பு படுகொலை நாளை நினைவுகூர்ந்து நடந்தகதை எம்கதை என்ற இசையும், அசைவும் என்ற நிகழ்ச்சியினை செய்திக்கின்றனர். நாகசக்தி நாடக ஆற்றுகைகள் பிரதேசத்தில் இருக்கும் பல்வேறு ஆலயங்களில் ஒரு இரவு முழு நிகழ்வாக ஆற்றுகை செய்யப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் பணம் சேகரிக்கப்பட்டு அவை பல்வேறு வேலைகளைச் செய்வதற்கு உதவியிருக்கின்றன.

மன்ற உறுப்பினர்கள் காட்சி, இசை, ஒப்பனை, அரங்கப்பொருட்கள், அரங்க அலங்காரம் என அனைத்தையும் தாங்களே செய்வதற்கு தங்களை வளர்த்துக்கொண்டனர். இவ்வாறு இதன் நாடகப்பயணம் தொடர்கின்றது.



"எங்கள் மரபுகளின் வேர்களில் நின்று எழுவோம்"